செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# தந்தி ②

இல: 1104 1970 ஆகஸ்ட் 10 திங்கட்கிழமை ★ விலை சதம் 5

University of Jaffna Sri Lanka RECEIVED 7 8 Periodicals Division Library

## இந்திய அதிகாரிகள் இலங்கைக்கு தகவல்

# கிழக்கு கடற்கரையில் கடத்தல்கள் அதிகரிப்பு!

**நாளுக்கு நாள் பெருமளவில் அதிகரித்து வரும் கடத்தல் நடவடிக்கைகளைத் தடுப்பதற்கான புதிய சட்டங்களை உள்நாட்டு வெளிநாட்டு அமைச்சு இப்போது தயாரித்து வருகிறது. கிழக்குக் கடற்கரையிலிருந்து கடத்தல்கள் பெருகி உள்ளனவாம்.**

கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு மிகக் கடுமையான தண்டனை விதிக்க இச் சட்டம் இடம் அளிக்கும்.

இதற்கிடையில் கிழக்கு கடற்கரையில் கள்ளக் கடத்தல்கள் அதிகரித்து வருவதாக அரசாங்கத்துக்குத் தகவல்கள் கிடைத்து வருகின்றன.

இவைகளில் பெரும்பாலானவை, இலங்கை உற்பத்திப் பொருட்கள் வெளியே கடத்தப்படும் சம்பவங்களைப் பற்றியவை ஆகும்.

சென்னை சுங்க அதிகாரிகளிடமிருந்து உயர் அறிக்கை ஒன்று இலங்கை அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் கடத்தல் விபரங்கள் தெளிவாகக் காணப்படுகின்றன.

சென்ற வாரம் தென்னிந்தியா திண்டுக்கல்லைச் சேர்ந்த ஒரு வியாபாரி ரூபா 1,20000 மதிப்புள்ள ஏலம், கிராம்பு போன்ற இலங்கையின் வாசனைப் பொருட்களை கடத்தியதாக ரூபா 50000 அபராதம் விதிக்கப்பட்ட விபரம், சென்னை சுங்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் கிழக்குக் கரையிலிருந்து சென்னைக்கு இப்பொருட்கள் கடத்தப்பட்டனவாம்.

இவற்றை அடுத்து, கிழக்குக் கடற்கரை தீவிரமாகக் கண்காணிக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். (ய)

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, ஆக. 10

நேற்று முன்தினம் கொழும்பு லொத்தர் சபை காரியாலயத்தில் இழுக்கப்பட்ட 310-வது தேசிய சுவீப்பில் பரிசுபெற்ற டிக்கட்டுகளின் விபரம்.

முதல் பரிசு

**20 U 0385**

ரூ. 90,530

இரண்டாவது பரிசு

**18 Z 0678**

ரூ. 36, 212

மூன்றாவது பரிசு

**18 P 0693**

ரூ. 9,053

(4-ம் பக்கம் பார்க்க)



...யபத்தில் இடம்பெற்ற "ஸ்டார்டஸ்ட் நைட்" களியாட்ட விழாவில் அழகுராணியாகத் தெரிவு செய்யப்பட்ட அலோமா புல்ட்ஜென்ஸ் கண்களை அகல விரித்து, காதிலே அணிகலன் பூண்டு, புன்னகையைச் சிந்தி மகிழ்கிறார். (ய)

## ஒலிபரப்பு ஊழல்கள் பற்றி றோயல் கமிஷன் விசாரணை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், தகவற் திணைக்களம் ஆகிய இடங்களில் 1965-ம் ஆண்டு முதல் 1970-ம் ஆண்டுவரை நடைபெற்ற நிர்வாக ஊழல்கள், மோசடிகள், நியமனங்கள் குறித்து விசாரணை செய்வதற்கு றோயல் கமிஷன் ஒன்று விரைவில் நியமிக்கப்படும்.

பொதுத் தேர்தலுக்கு முதல் நாளான மே 26-ம் திகதி, ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மல்வத்தை மகாநாயக்க தேரோ வெளியிட்ட அறிக்கை என்று கூறி ஒலிபரப்பிய செய்தி பற்றியும் உத்தேச றோயல் கமிஷன் விசாரணை நடத்தும் என்று தெரிகிறது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்கு கமிட்டி ஒன்றை ஏற்படுத்துவதற்கு தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. ஆர். எஸ். பெரேரா முன்னர் முடிவு செய்திருந்தார். உத்தேச கமிட்டியின் தலைவராக திரு. வி. சி. ஜயசூரியாவை நியமிப்பதற்கும் அமைச்சர் அப்பொழுது முடிவு செய்திருந்தார்.

உத்தேச கமிட்டியை நிறுவுவதைவிட றோயல் கமிஷன் ஒன்றை நிறுவுவதே பொருத்தமானது என்று தற்பொழுது அமைச்சர் கருதுவதாகவும், விரைவில் றோயல் கமிஷன் ஒன்று ஏற்படுத்தப்பட இருப்பதாகவும் தெரியவந்துள்ளது. (ம)

## மினுட்சி



என்னுங்க, ஏதாவது சாமான் விலை குறைந்திருக்கிறதா?

அப்படியென்றால் ஒரு கமிஷனை நியமித்துவிட்டால் அறிந்துவிடலாம்!

## தமிழ் நாட்டில் 3,354 கம்யூனிஸ்டுகள் கைது

சென்னை, ஆக. 9

நில ஆக்கிரமிப்பு இயக்கத்தைத் தொடர்ந்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 3354 பேர் இதுவரையில் தமிழ்நாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் குற்றத்தடுப்புச் சட்டத்தின் 144-வது பிரிவின்கீழ் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பல இடங்களில் இந்தத் தடை உத்தரவு பத்து முதல் 12 நாட்களுக்குப் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காணியற்ற விவசாயிகளிடையே பங்கிடு செய்வதற்காக பயன்படுத்தப்படாததும் மேலதிகமானதுமான 20 கோடி ஏக்கர் காணியைப் பலவந்தமாகக் கைப்பற்றும் நில ஆக்கிரமிப்பு இயக்கத்தையே இடதுசாரிக் கட்சிகள் ஆரம்பித்துள்ளன.

தமிழ்நாட்டில் தஞ்சாவூரில்தான் அதிகமானோர் கைதாகி உள்ளனர். தஞ்சாவூரில் மட்டும் 2093 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

காணியற்றோருக்கு காணிகளை வழங்குவும், நிலச் சீர்திருத்தங்களை கொண்டுவரவும் அரசாங்கம் தவறியதாலேயே இந்த இயக்கம் ஆரம்பிக்கப்படுவதாக இடதுசாரிக்கட்சிகள் கூறியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12 வருடமாக வீட்டுக்குப் போய் வருகிறேன்

# மனுதாரப் பெண்ணுடன் ஆறு வருடகால உறவு!

### ஆசாமியை எச்சரித்து விடுதலை செய்தார் நீதவான்

"மனுதாரப்பெண் திருமணமானவர். அவரது கணவர் எனது நீண்டகால நண்பர். கடந்த 12 வருடங்களாக அவர்களின் வீட்டுக்கு நான் அடிக்கடி சென்று வந்திருக்கிறேன். மனுதாருடன் கடந்த ஆறு வருடங்களாக நான் நெருங்கிய தொடர்பு வைத்திருக்கிறேன். இன்னும் அந்தப் பெண்ணை நான் மனமாரக் காதலிக்கிறேன்."

சிலின் என்னும் பெண்ணின் கற்புக்கு களங்கம் ஏற்படுத்த முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்த டி. ஜேமிஸ் என்பவருக்கு எதிரான வழக்கு இரத்தினபுரி நீதவான் திரு. சிறிலால் பெரேரா முன்னிலையில் நடைபெற்ற போது சாட்சியம் அளித்த எதிரி மேற்கண்டவாறு கூறினார்.

நீதவான்: "மாற்றான் மனைவியைக் கெடுக்க நீர் முயன்றது தகுமா? இது போன்ற குற்றங்களைச் செய்ய உமக்கு வெட்கம் இல்லையா?"

எதிரி: "இந்தப் பெண் வேறொருவரின் மனைவியாக இருந்தாலும் கடந்த ஆறு வருடங்களாக எனது ஆசைநாயகியாக இருந்துள்ளார். அந்த உரிமையின் பேரில் அவள் வீட்டுக்கு நான் செல்வது தவறா ஐயா!"

மனுதாரர்: "இந்த மனிதர் எனது ஆசை நாயகர் என்று சொந்தம் கொண்டாடுவது அப்பட்டமான பொய். இவர் எங்கள் வீட்டில் வாழ்ந்து வந்தார் என்று கூறுவதும் தவறு."

நீதவான்: (எதிரியைப் பார்த்து) "நீர் கூறியவை அனைத்தையும் பொய் என்று கூறுகிறார் இந்தப் பெண். இதற்கு நீர் என்ன கூறுகிறீர்?"

எதிரி: "இவளது கணவர் கடந்த நான்கு வருடங்களாக நோய்ப்படுக்கையில் இருக்கிறார். நான்தான் அவளுக்கு உதவிசெய்து வருகிறேன்."

மனுதாரர்: "இவர் சொல்வது உண்மையானால் அது எனது கணவரின் கண்ணுக்கும் எட்டியிருக்குமே ஐயா! இதுபற்றி நீங்கள் அவரிடம் விசாரித்துக் கொள்ளலாம்."

நீதவான்: "அயலவர்களிடம் இதுபற்றிக் கேட்பது நல்லது என நினைக்கிறேன். உங்கள் பகுதிக் கிராம சேவையாளரிடம் கேட்கட்டுமா?"

மனுதாரர்: "இவர் முந்திய காலத்தில் எங்கள் வீட்டுக்கு வந்ததுண்டு. ஆனால் வீட்டில் தங்கியது கிடையாது."

நீதவான் எதிரியை விடுதலை செய்தார். இதுபோன்ற குற்றச்சாட்டின் பேரில் அவர் மீண்டும் நீதிமன்றத்துக்கு வந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை செய்தார். (ம)

### சீதனப் பிரச்சினையால் பருவமங்கை தற்கொலை

சீதனப் பிரச்சினையால் நச்சுத் திராவகம் அருந்தி உயிரை மாய்த்தாளாம் பத்தொன்பது வயது பருவ மங்கை ஒருத்தி. இப் பரிதாப சம்பவம் அவிசாவளைப் பொலீஸ் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அவிசாவளை, மணியங்கம என்ற இடத்தைச் சேர்ந்த பி. ஏ. குசுமாவதி என்ற பெண்ணே தற்கொலை செய்து கொண்டவராவார்.

அவிசாவளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணம் அடைந்த இப் பெண்ணின் மரணம் சம்பந்தமாக ஆஸ்பத்திரியில் மரண விசாரணை நடாத்திய மரண விசாரணை அதிகாரி முன்னிலையில் காலஞ்சென்றவரின் சகோதரியான பி. என். வயலெட் சில்வா கூறியதாவது:–

"எனது தங்கைக்கும் ஓர் இளைஞனுக்கும் கடந்த இரண்டு வருடங்களாக காதல் தொடர்பு உண்டு. இது எனது பெற்றோருக்கும் தெரியும். அவ்வாலிபன் எங்கள் வீட்டிற்கு வந்து போவதற்கும் எமது பெற்றோர் தடை விதிக்கவில்லை.

"சில நாட்களுக்கு முன்னர் தங்கையின் காதலன், தங்கையைத் தான் திருமணம் செய்வதானால், திருமணத்திற்கு முன்னர் தனக்கு சீதனப் பணமாக 1000 ரூபா தரவேண்டுமென எனது பெற்றோருக்குத் தெரிவித்தார்.

"இதை ஏற்றுக் கொண்ட எனது பெற்றோர் திருமணத்திற்கு முன்னர் தம்மால் முழுத்தொகையையும் தரமுடியாதெனவும், திருமணத்தின் பின்னர் மிகுதியை தந்து விடுவதாகவும் தெரிவித்தனர். இதற்குப் பின்னர் அவர் தனது காதலியைப் பார்க்க எமது வீட்டிற்கு வருவதை நிறுத்திக் கொண்டார்.

"இதனால் கவலையடைந்த குசுமாவதி சந்தோஷமின்றி இருந்தாள். சம்பவ தினம் திடீரென அவள் வாந்தி எடுப்பதைக் கண்டேன். உடனே அவளை அவிசாவளை ஆஸ்பத்திரியில் அனுமதித்தோம். அங்கு அவள் உயிர் பிரிந்தது" என்றார்.

மரண விசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (ம–7)

### காலஞ்சென்றவரின் பிணம் முன் விறுந்தையில் கிடந்தது

"எமக்குக் கிடைத்த தகவலைக் கொண்டு சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்ற நாம் காலஞ்சென்றவர் வீட்டு முன் விறுந்தையில் இறந்து கிடக்கக் கண்டோம். அவர் மீது மூன்று இரத்த அடையாளங்கள் காணப்பட்டன. பின்னர் நாங்கள் நடாத்திய தேடுதல் முயற்சியின் பலனாக இறந்தவரின் நெஞ்சிலும், கைகளிலும் பல காயங்கள் இருந்ததையும், அவரது உடை இரத்தத்தால் தோய்ந்திருந்ததையும் கண்டோம்."

பொலன்னறுவ மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நீதவான் திரு. எம். பீ. விஜயசிங்க முன்னிலையில் நடைபெற்ற கிரித்தல காலனி கொலை வழக்கில் சாட்சியமளித்த இங்குறக்கொட உதவிப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஜீ. கே. டீ. சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிரித்தல காலனியைச் சேர்ந்த ரி. பாரன் என்பவரைக் கடந்த பெப்ரவரி மாதம் 4ம் திகதி வெட்டுக்கத்தியாலும், கிரீஸ் கத்தியாலும் தாக்கிக் கொலை செய்ததாக அதே இடத்தைச் சேர்ந்த எம். எம். ஆரியதாச, டீ சில்வா, ஜீ. தர்மரத்ன ஆகியோர் மீது இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

சாட்சி தாம் சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து ஓர் கிரீஸ் கத்தியையும், ஓர் வெட்டுக்கத்தியையும் கண்டெடுத்ததாக நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இறுதியாக நீதவான் வழக்கு விசாரணையை ஆகஸ்ட் மாதம் 11ம் திகதிக்குப் பின் போட்டார். (ம–7)

### விமான கடத்தல் மூவர் கைது

செக்கோஸ்லோவேகிய விமானம் ஒன்றை வியன்னாவுக்குக் கடத்திச் சென்ற மூவரை ஆஸ்திரிய பொலீஸார் கைது செய்துள்ளனர்.

பிரேக்கில் இருந்து பிரேடிஸ்லாவே நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது இந்த விமானம் கடத்தப்பட்டது.

கடத்தல்காரர்கள் கைத்துப்பாக்கிகள், பெட்ரோல் குண்டுகள் ஆகியவற்றை உபயோகித்தனர்.

### நற்பயன் தருவதாக

வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்ற வேண்டியது அரசாங்கத்தின் முதல் வேலையாய் இருத்தல் வேண்டும். இது முதல் அமைச்சர் திருமதி பண்டாரநாயக்காவின் வேண்டுகோள். யூ. என். பீ. அரசாங்கம் இதோ வேலை தருவோம், அதோ வேலை தருவோம் என்று வாக்குறுதி அளித்து அவற்றைக் காப்பாற்றாததாலேயே அது கவிழ்ந்தது என்பதையும் திருமதி பண்டாரநாயக்கா சுட்டிக்காட்டியுள்ளார். எனவே இவ்வாண்டு முடிவதற்குள் பத்தாயிரம் பட்டதாரிகளுக்கும், இருபதினாயிரம் ஜீ. ஸீ. ஈ.காரர்களுக்கும் வேலை வழங்க வகையறியுமாறு மற்றும் அமைச்சர்களுக்கு அவர் உத்தரவிட்டுள்ளார். ஏற்கனவே அரசாங்க சேவையிலும் கூட்டுத்தாபனங்களிலும் நாற்பதினாயிரம் பேருக்கு வேலையளிப்பதற்கு ஆவன செய்யப்பட்டு வருகின்றது. இதற்குப் புறம்பானதாகும் இப்போது கேட்கப்பட்டுள்ள முப்பதினாயிரம் வேலைகள். இதுவும் வழி செய்யப்பட்டால் ஆண்டு முடிவதற்குள் எழுபதினாயிரம் வேலையற்ற படித்தவர்கள் வேலை பெறுவர். முயற்சி திருவினையாக்கும். முதலமைச்சரின் நன்முயற்சி நற்பயன் தருவதாக. வேலையற்ற படித்த வாலிபர்களுக்கு வாழ்வளிப்பதாக!

தந்தி

### நான்கு இலங்கையருக்கு நாடு கடத்தல் உத்தரவு

லண்டன், ஆக. 9

தந்தையும், தாயும் இரு புத்திரிகளுமான இலங்கையர் குடும்பம் ஒன்று நாடு கடத்தப்பட வேண்டும் என்று லண்டன் நீதிமன்றம் ஒன்று உத்தரவிட்டுள்ளது.

1968–ம் வருடம் ஆறுமாத அனுமதிப் பத்திரத்துடன் இவர்கள் நால்வரும் இலங்கையில் இருந்து லண்டனுக்கு வந்து அதற்கு கூடுதலாக தங்கி விட்டனர் என நீதிமன்றத்தில் கூறப்பட்டது.

59 வயதுடைய எட்மண் சந்திரம் அவரது மனைவி மார்கிரெட், 30 வயதுடைய மகள் சிந்தியா, 20 வயதுடைய நஹோமி ஆகிய நால்வரும் தாம் குற்றவாளிகள் என்பதை ஒப்புக் கொண்டனர்.

நீதிமன்றத்தின் உத்தரவு உள்நாட்டு அமைச்சின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது. இவர்கள் நால்வரும் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர். (ம)

தந்தி
சிறு விளம்பரங்கள்

சாரதி பயிற்சி

நீங்களும் ஒரு சாரதியாக வேண்டுமா? திறமையாகவும் உத்தரவாதத்துடனும் உங்களை அதி சிறந்த கார் சாரதியாக்கும் ஒரே ஸ்தாபனம் மஸ்கெலியா கில்கன்றி லேனர்ஸ். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: வி. கணேசன், கில்கன்றி லேனர்ஸ், மஸ்கெலியா.
C- 52251

பிருங்கராஜ தைலம்

கூந்தல் உதிர்வதையும், பொடுகையும் தடுத்து, கேசத்திற்கு கருநிறத்தையும் பளபளப்பையும், அளிக்கும். உயர்ந்த மூலிகைகளை கொண்டு தயாரிக்கப்பட்டது. மூளைக்கு குளிர்ச்சியளித்து, ஞாபக சக்தியை அதிகரித்து, கண் எரிச்சல், தலைவலி, பீனிசம், மூலகடுப்பு, முதலியவைகளை போக்கி நிம்மதியான சுகத்தை கொடுக்கிறது. சரவண கெமிக்கல் இன்டஸ்ரிஸ், 275. டாம் வீதி, கொழும்பு. புட்டியின் விலை. ரூபா. 4/75.
R. 69804

வசியம்

காதலில் வெற்றியை எதிர்பார்ப்பவர்களுக்கு தவறாத மலையாளி வசிய பரிகாரம். மூன்று நாட்களில் பலன் கிடைக்கும். இருவரின் பெயர்களுடன் இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்: சிவபாலன், குப்த வித்தியாதனய, ஊருப்பொலை.
R. 69428

மருந்து

மதன சஞ்சீவி லேகியம். (ஆண்களுக்கு மட்டும்) பாலிய சேஷ்டையினாலோ, அல்லது அதிக சம்போகத்தினாலோ, வீரியம், ஆண்மை குறைந்தவர்களுக்கும் (SEXUAL DEBILITY) சக்தியை இழந்தவர்களுக்கும் இழந்துபோன சக்தியைமீட்டு, புதிய சக்திக்கும் திரேக வளர்ச்சிக்கும், குடும்ப வாழ்க்கைக்கும் சிறந்த லேகியம், ஒரே புட்டியில் குணம் காணலாம். மதன சஞ்சீவி, ஒரு ருத்தல் ரூ: 23/–. ½ ருத்தல் ரூ. 12/– வி. பி. பி. ஆடர் கவனிக்கப்படும். முருகானந்தா வைத்திய சாலை, 104, செட்டியார் தெரு, கொழும்பு - 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணவன் வெளியூரில்: மாற்றானுடன் ஜல்ஸா

# இரு நிர்வாண மனிதர் மத்தியில் ஒரு கட்டழகி!

## பொலீஸ்காரன் உருவில் வந்தது ஏழரைச் சனியன்

உத்தியோக அலுவலாக வெளியூர் சென்றிருந்த அந்த ஆசாமி ஒரு நாள் முன்பதாகவே வீடு திரும்பியபோது வாசல் கதவு பூட்டப்பட்டிருந்ததைக் கண்டு திடுக்கிட்டார்.

கதவைத் தட்டினார். சிறிது நேரத்தின் பின்னர் தான் கதவு திறந்தது. கதவைத் திறந்த அழகி தனது கணவனைக் கண்டு திடுக்கிட்டாள். அவனை அந்த நேரத்தில் அவள் எதிர்பார்க்கவில்லை என்பது அவள் முகத்தில் தெரிந்தது. நண்பகல் நேரமான போதிலும், பெண்கள் இரவில் படுக்கைக்குப் போகும்போது அணியும் மிகவும் மெல்லிய, கவர்ச்சியான கவுனை அவள் உடுத்திருந்தாள்.

தன்னைச் சுதாரித்துக் கொண்ட அந்த அழகி தனது கணவனைக் கட்டி அணைத்து முத்தமிட்டவாறே "அன்பே, நீங்கள் மிகவும் களைப்படைந்திருக்கிறீர்கள். குளித்துவிட்டு வாருங்கள். சாப்பிடலாம்" என்றாள்.

ஒரு முத்தத்திலேயே பிரயாண அலுப்பை மறந்த அந்த அப்பாவி குளியலறைக்குள் புகுந்து கதவை மூடிக் கொண்டார். ஆடைகளைக் களைந்துவிட்டு குளிக்க ஆரம்பித்தபோது வாசல் கதவு மணி ஒலித்தது.

அந்த அழகி கதவைத் திறந்தாள். பொலீஸ்காரர் ஒருவர் வாசலில் காணப்பட்டார். "வீட்டுக்கு முன்னால் கார் ஒன்று நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்தக் காரை ஓட்டி வந்த ஆசாமி விபத்து ஒன்றில் சம்பந்தப்பட்டுள்ளார். அவருடன் நான் பேச வேண்டும்" என்று அந்தப் பொலீஸ்காரர் கூறினார்.

அதற்குப் பதிலளித்து அந்த அழகி, "எனது கணவரைத் தவிர இந்த வீட்டில் வேறு ஆடவர்கள் இல்லை. அவர் கூட ஐந்து நிமிடங்களுக்கு முன்னர்தான் இங்கு வந்தார்" என்றாள்.

அப்போது படுக்கை அறை அலுமாரி திடீரென்று திறந்து கொண்டது. கட்டுமஸ்தான அழகிய இளைஞன் ஒருவன் வெளியே வந்தான். நிர்வாண கோலத்தில் அவன் இருந்தான். "நான்தான் அந்தக் காரின் டிரைவர்" என்று அவன் கூறினான்.

அப்போது குளியலறைக் கதவு திறந்து கொண்டது. வீட்டுக்கார ஆசாமி கோபத்துடன் நிர்வாண கோலத்துடன் வெளியே வந்தார். படுக்கையறையில் மாற்றான் ஒருவன் நிர்வாண கோலத்தில் கண்ட அவனின் உள்ளம் எப்படி இருக்கும்?

நிர்வாண மனிதன் ஒருவன் மற்றும் ஒரு நிர்வாண ஆசாமியைத் துரத்தி விரட்டுவதையும், அந்த இருவர் மத்தியில் அரை நிர்வாண அழகி ஒருத்தி சிக்கித் தவிப்பதையும் கண்டு திடுக்கிட்ட பொலீஸ் அதிகாரி வீட்டுக்கு வெளியே காத்திருந்த தனது சக பொலீஸ்காரர்களை உதவிக்கு அழைத்தார்.

இந்த வழக்கு ஜெர்மனியிலுள்ள கிரேபீல்ட் நகர நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது "கணவன் வீட்டில் இல்லாதபோது மாற்றானுடன் இன்பம் அனுபவித்திருக்கிறாள் அந்த வீட்டுக்காரி. ஆனால் கணவன் எதிர்பாராதவிதமாக வந்துவிடவே, தனது கள்ளக் காதலனை நிர்வாண கோலத்துடன் படுக்கை அறை அலுமாரிக்குள் விட்டுப் பூட்டி இருக்கிறாள். அதற்குள் பொலீசார் வந்துவிடவே அவள் மாட்டிக் கொண்டாள்" என்று தெரிவிக்கப்பட்டது.

தன்னை வஞ்சித்த மனைவியிடமிருந்து விவாகரத்து பெற்று இப்போது நிம்மதியாக வாழ்ந்து வருகிறார் அந்த ஆசாமி. (ம)

## விண்ணிலே ஒரு உளவாளி

ஹொங்கொங், ஆக. 9

விண்ணிலே உளவறியும் ஒரு செய்மதி கடந்த சனிக்கிழமை முதல் செயல்பட்டு வருவதாக நம்பப்படுகிறது.

சனிக்கிழமை நள்ளிரவு முதல் அமுலான மத்திய கிழக்கின் 90 நாள் யுத்த நிறுத்தத்துக்கு உதவவே இச் செய்மதி விண்ணில் வலம் வருவதாக அறியப்படுகின்றது. (ர)

## பயமுறுத்தல்

மொண்டிவிடோ, ஆக. 9

கடத்தப்பட்ட அமெரிக்க அதிகாரியை கொன்று விடுவதாக இடதுசாரி கெரில்லாக்கள் பயமுறுத்தியுள்ளனர்.

மத்திய மொன்டிவிடோ வீதியொன்றில் காணப்பட்ட கெரில்லாக்களின் பிரசுரம் ஒன்றின் மூலம் இப்பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ர)

## கொலை சந்தேக நபர்களை பிணையில் விட மறுப்பு

கொலைக் குற்ற சந்தேக நபர்கள் பிணையில் விடப்படல் வேண்டும் என்ற வழக்கறிஞரின் வேண்டுகோள் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.

எருக்கலம்பிட்டி கடலில் கடந்த மாதம் 11ந் திகதி நடந்த தாக்குதல் சம்பவத்தையடுத்து தாக்கப்பட்டவர் எனக் கூறப்படும் எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த கே. எம். அப்துல் காதர் என்பவர் மறுநாள் மன்னார் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

இக் கொலை சம்பந்தமாகப் பொலீசாரால் கைது செய்யப்பட்ட பனங்கட்டிக்கொட்டு வாசிகளான பத்மன் என்ற எஸ். பத்மநாதன் (16), பிரான்சிஸ் என்ற கே. எஸ். ராஜன் (16), எஸ். சுபாஸ் சந்திரபோஸ் (17), தாஸ் வீரசூரிய(21) ஆகிய நால் தாஸ் வீரசூரிய (21) ஆகிய நாரி வரும் விளக்கமறியலிலிருந்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்ய இன்னும் சில நாட்கள் செல்லும். வழக்குத் தாக்கல் விடயமாக அட்டோர்னி ஜெனரலின் ஆலோசனை கேட்கப்பட்டுள்ளது. ஆகவே மேலும் அவகாசம் தர வேண்டும் என்று மன்னார் தலைமை நிலைய பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜனாப் எம். எஸ். எம். நிசாம் நீதவானிடம் கூறினார். எதிரிகள் சார்பில் ஆஜரான அட்வகேட் திரு. எம். ஆலால சுந்தரம் இதை ஆட்சேபித்து, சுபாஸ் சந்திரபோசும், அந்தோனிதாஸ் வீரசூரியாவும் பிணையில் விடப்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். பிணை கொடுப்பதை ஆட்சேபித்த இன்ஸ்பெக்டர் நிசாம், அதற்குரிய சட்டத்தை ஆதாரமாகக் காட்டினார். இதனை ஏற்றுக் கொண்ட மன்னார் கூட்டு நீதவான் திரு. தே. வி. நவரட்னம் சட்ட விளக்கத்தை மேலும் மேற்கோள் காட்டி இரு சந்தேக நபர்களையும் இம்மாதம் 12ந் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். பத்மன் என்ற பத்மநாதனும், பிரான்சிஸ் என்ற ராஜனும் முன்னைய தவணையின் போது தலா ரூ. 2000 பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். ஆனால் அவர்கள் இப்பிணையைச் செலுத்தவில்லையாதலால் அவர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு திரு. நவரட்னம் உத்தரவிட்டார். (ம–185)


## கோபால் பல்பொடி

பற்களுக்கு வெண்மை தந்து பல் வியாதிகளைக் குணப்படுத்துகிறது. இந்தியாவிலும் இலங்கையிலும் விற்கபபடுகிறது.

**S. P. S. ஜெயம் அன் கோ.**

மதுரை – கொழும்பு

விற்குமிடம்:-

34, செட்டியார் தெரு, கொழும்பு – 11.

தபால் பெட்டி: 1298.
தொலைபேசி எண்; 26584






## பாரிசவாதம் அல்லது போலியோ

போன்ற கொடிய வியாதிகளையிட்டுப அநேக காலமாக பலவிதமான மருந்துகளை செய்தும் குணப்படாமல் மனம் வேதனை அடைந்து எவ்வளவு காலம் சென்ற கொடிய வாத நோய்களானாலும் சரியே எங்கள் இராஜ வைத்திய அனுபவங்களின் மூலம் ஒரு லட்சத்துக்கு மேற் கொண்ட வியாதியஸ்தர்களை குணப்படுத்தி கைகண்ட

### பாரிசவாத தைலம்

கீழ்க் குறிப்பிட்ட வியாதியஸ்தர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் — தங்களின் வியாதிகளுக்கு இன்றே உபயோகித்து பூரண சித்தியடையுங்கள். திரும் வியாதிகள் சகல வகைப்பட்ட பாரிச வாதம் இளம்பிள்ளை வாதம், முடக்கு வாதம், நடுக்கு வாதம் பச்சை வாதம், பக்கு வாதம் அண்ட வாதம், இடுப்பு வாதம், குடல் வாதம், நெஞ்சு அல்லது மாரடைப்பு, மொளிகளில் வீக்கம், கற்தழும்பு, குதிக்கால் நரம்புகள் வலி, வீக்கம், உடம்பில் பற்பல ஊரல்கள் சொறி சிரங்கு அல்லது கட்டிகள், கடிவேகம், புழு மேய்ச்சல், உடம்பில் கரும் புள்ளிகள், வெள்ளை படருதல், சிறுவர்களுக்கு கைகால் உறுப்புகள் பலஹீனம், முடக்கம், சோர்வு, கழுத்து, முதுகந்தண்டு, இடுப்பு பலஹீனம், தசை கரைந்து, கணுக்குக்கு கணு வீக்கம், முடக்கம் போன்ற போலியோ நோய்களையும் மேற்படி மேலே குறிக்கப்பட்ட எவ்வித கடினமான நோய்களையும் ஏழு தினம் சிகிச்சையின் பின் குணம் காண்பீர்கள்:— சகல விபரங்களையும் மருந்துடன் அனுப்பி வைப்போம். நேரிலும் அல்லது வி. பி. பி. தபாலிலும் பெற்றுக் கொள்ளலாம்.

12 அவுன்ஸ் போத்தல் ஒன்றுக்கு ரூ. 100/-. 6 அவுன்ஸ் ரூ. 50/-
2 அவுன்ஸ் ரூ. 20/-. தபால் செலவு சதம் -/90.

### இழந்த சக்தியை மீண்டும் பெறுவதற்கு
## ரிஷி மன்மதன ஹல்வா

இன்றே சாப்பிடத் தவறாதீர்கள்

தெரிந்தும் தெரியாமலும் துர்ப்பழக்க வழக்கங்களில் ஈடுபட்டு தனது சக்தியை இழந்து அவதிப்படுவோர்களுக்கும் கொடிய கனவுகளால் தனது சக்தியை இழந்து மித்தன்மையான வகையில் நீர் வியாதிகள் ஏற்பட்டு நீர், சினி போகுதல், மாவு, வெண்ணெய் போன்ற வகையில் வெளியாகி இளைப்பு, இருமல், சோகை, மூட்டு வலிகள், அல்லது வீக்கம் ஏற்பட்டு நரம்புத் தளர்ச்சியுண்டாகிய ஆண் - பெண் இரு சாரார்களுக்கும் இல்லற வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டு உலகத்தில் ஜீவியம் செய்யவே விருப்பமில்லாமல் மனவேதனைப்படும் அன்பர்களுக்கு இதோ உங்களுக்குப் புத்துயிர் தந்து இன்புற்று வாழ எங்களின் ரிஷி மன்மதன ஹல்வாவை சாப்பிடுவீர்களானால் ஆச்சரியப்படக்கூடிய வகையில் உங்கள் வாழ்க்கையை பிரதிபலிக்கச் செய்யும் ஓர் அற்புத சஞ்சீவி இந்த ரிஷி மன்மதன ஹல்வா.

30 நாள் மருந்து ரூ. 40/-. 15 நாள் மருந்து ரூ. 20/-
தபால் செலவு -/10 சதம்.

வி. பி. பி. தபாலில் பெற்றுக் கொள்ளலாம்.

கடந்த 787 ஆண்டுகளாக கண்டி பூர்வீக மன்னர்களுக்கும், பல லட்சக்கணக்கான வியாதியஸ்தர்களுக்கும் பரம்பரை, பரம்பரையாகச் சிகிச்சை செய்து அளவற்ற பல நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றுவரும் இராஜ வைத்தியர் வைத்தியரத்தின முதலியார் அவர்கள் வகை.

**ஏ. எல். எம். ஜே. டி. உடையார்,**
வாத ரோக நிபுணர், இராஜ வைத்தியர்,
மடவலை பஜார், கண்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றுப் பள்ளத்தாக்கு சபையில் மோசடி!

## ரகசியப் பொலீஸார் விசாரணை நடத்துவர்

ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையில் 84 ஆயிரம் ரூபா மோசடி நடந்துள்ளதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சபையின் தலைவர் திரு. ஏலியன் ஜயசேகராவினல் நியமிக்கப்பட்ட மூவர் கமிட்டி இந்த மோசடியைக் கண்டு பிடித்துள்ளது. இந்தக் கமிட்டிக்கு லெப்டினன்ட் கேர்ணல் எம். சி. எப். அபெயக்கோன் தலைவராக இருந்தார்.

ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தி சபையின் இரு அதிகாரிகள் பொய் ரசீதுகளின் மூலம் இந்த மோசடியைச் செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த விஷயம் இரகசிய பொலீசாரிடம் ஒப்படைக்கப்பட உள்ளது. (ம)

## அதுவும் தோல்வி

லண்டன், ஆக. 9

சர்ச்சைக்கிடமான "ஓ கல்த்தாக" எனும் நிர்வாண நாடகத்தை தடை செய்யும் இரண்டாவது முயற்சியும் தோல்வியடைந்தது.

வட லண்டனில் காட்டப்படும் இந்நாடகத்தை தடை செய்யும்படி கோரி சட்டநடவடிக்கை மூலம் கோரப்பட்டிருந்தது.

## 24 (1)ம் இலக்கச் சட்டம் தீங்கு விளைவிக்கும்–அஸீஸ்

"24 (1)ம் இலக்கச் சட்டம் அடிப்படை உரிமைகளுக்குத் திங்குவிளைப்பதாகும் என்பதுதான் ஐ. தொ. கா. வின் கருத்து" என ஐ. தொ. கா. வின் தலைவரும், நியமன எம். பி. யுமான ஜனப் ஏ. அஸீஸ் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தம் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

"24 (1)ம் இலக்கச் சட்டமானது இந்திய வம்சாவளியினரினதும், பதிவுப் பிரஜைகளினதும் அடிப்படை உரிமைகளுக்கே முரணானதாகும். இத்தகைய ஷரத்துக்கள் நீக்கப்பட வேண்டியது இன்றியமையாதது என்பதை ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் பல ஆண்டு காலமாக வற்புறுத்தி வந்துள்ளது. அரசியல் நிர்ணய சபையிலும் 24 (1)ம் இலக்கச் சட்டம் பற்றி நான் உரையும் நிகழ்த்தியுள்ளேன்.

"24 (1)ம் இலக்கச் சட்டமானது, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் சேர் ஜோன் கொத்தலாவலை பிரதமராய் இருந்த வேளையில் ஏற்படுத்தப்பட்டதாகும். ஆனல், ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் நியமன அங்கத்தவர்களாக இருந்தவர்கள் 24 (1)ம் இலக்கச் சட்டத்தைப் பற்றியும் அதன் விளைவுகளைப் பற்றியும் நாடாளுமன்றத்தில் எடுத்துக் கூறவில்லை. ஆனல் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்ததும் 24 (1)ம் இலக்கச் சட்டத்தைப் பற்றியும் தீமைகளைப் பற்றியும் எடுத்துக் கூறுகின்றனர். ஆனல் அன்று அவர்கள் வாய்மூடி மௌனிகளாய் இருந்தமைக்குக் காரணம், ஐக்கிய தேசியக் கட்சியினருடன் செய்து கொண்ட ஒப்பந்தமேயாகும்.

"ஐக்கியமுன்னணி அரசு, நாட்டுக்கும் மக்களுக்கும், நல்ல பல காரியங்களைச் செய்து வருகிறது. எனவே வேறு விஷயத்திலும் அவர்கள் பேச முடியாத காரணங்களாலேயே இப் பித்தலாட்டக்காரர்கள் 24 (1)ம் இலக்கச் சட்டத்தைப் பற்றி பேசி வருகின்றனர். இதைக் காட்டியாவது மக்களைக் தம்பால் ஈர்க்கலாம் என நினைக்கின்றனர். அவர்கள், 24 (1)ம் இலக்கச் சட்டமானது தீமை பயக்கக்கூடியது என்பதை ஒரு உண்மையாகக் கருதவில்லை என்பதற்கு அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் காலத்தில் அமைதியாக இருந்தமையே நல்ல ஓர் உதாரணமாகும். 24 (1)ம் இலக்கச் சட்டம் போன்றவை பற்றி நான் தொடர்ந்தும் அரசாங்கத்தோடு தொடர்பு கொள்வேன்"— இவ்வாறு ஜனப் அஸீஸ் தெரிவித்துள்ளார். (ம)

## எம். பி.க்களுக்கு மேலதிக அலவன்ஸ்

அரசமைப்பு நிர்ணய சபை ஏற்படுத்தப் பட்டதைத் தொடர்ந்து, இம்மாதம் முதல் சகல எம். பி.க்களுக்கும் மேலதிக அலவன்ஸ் கிடைக்க உள்ளது.

நாடாளுமன்றக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் எம். பி.க்கள் அரசமைப்பு நிர்ணய சபைக் கூட்டங்களிலும் கலந்து கொள்வதினலேயே இந்த மேலதிக அலவன்ஸ் வழங்கப்படுகிறது.

அரசமைப்பு விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா நாளை நடைபெறும் அரசமைப்பு நிர்ணய சபைக் கூட்டத்தில் இதுபற்றி அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## 100 மீனவர்கள் திரும்பவில்லை

கடந்த வெள்ளிக்கிழமை இரவு நீர்கொழும்பு கடலில் 25 படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற சுமார் 100 மீனவர்கள் இன்னும் கரை திரும்பவில்லையாம். காணமல் போன மீனவர்கள் பற்றிய விபரங்களை நீர்கொழும்பு பொலீஸார் சேகரித்து வருகின்றனர்.

இரவில் வடமேற்காய் சுமார் 38 மைல் வேகத்தில் புயல்காற்று வீசியது என கொழும்பு வான்நிலை அவதான நிலையத்தினர் தெரிவித்தனர்.

நீர்கொழும்பு பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு 11-00 மணி முதல் நடு இரவு 12 மணிவரையும் பேய்க்காற்று வீசியதாம். இதனல் இப்பகுதியில் உள்ள வீடுகளுக்கும் உடைமைகளுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (ம)


அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

**பதவி வெற்றிடம்**

கீழ்க்காணும் பதவிக்கான விண்ணப்பங்கள் தேவையெனக் கருதப்படும் தகுதிகள் கொண்ட இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து கீழ்க் கையொப்பமிடும் உத்தியோகத்தரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கணக்காளர் பதவி

சம்பளம்: ரூபா 1350—6 X 50—1650 மாதமொன்றிற்கு எல்லாம் உட்பட. வயதெல்லை: 21–8–70 அன்று 30 வயதுக்கும் 40 வயதுக்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும். அரசாங்க கூட்டுத்தாபனச் சேவையில் உள்ளவர்களுக்கு மேற்கூறிய வயதெல்லை பொருந்தாது.

கல்வியும் மற்றும் தகைமைகளும், "சார்டட்" கணக்காளர், இணைச் சங்கக் கணக்காளர் அல்லது செலவுக் கணக்காளர் நிலையத்தின் அங்கத்தவர் ஒருவராகவும் ஆகக் குறைந்தது 3 வருட அனுபவம் பெற்றவராகவும் அல்லது இந்நிலையங்கள் ஏதாவதொன்றின் இடையான பரீட்சையில் தேறியவராகவும், ஆகக் குறைந்தது 5 வருட அனுபவம் பெற்றவருமான ஒருவர் அல்லது கணக்காளர் இறுதித் தகுதித் தேர்வுப் பத்திரமும் 5 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும் பெற்ற ஒருவர் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனச் சேவையில் உதவிக் கணக்காளராக 7 வருட அனுபவம் பெற்ற ஒருவராக இருத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் அவரது அனுபவம், தகைமைகளுக்கு இணங்க மேற்கூறப்பட்ட சம்பள அளவுத் திட்டத்தின் ஏற்ற படியொன்றில் நியமிக்கப்படுவார்.

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் தலைவரிடமிருந்து பெறக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் 21–8–70 அன்று அல்லது அதற்கு முன்பு பதிவுசெய்யப்பட்ட கடிதவுறைகளில் தலைவர், அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், 2. பீ. டிபொன்சேகா வீதி, கொழும்பு—5 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பங்களைக் கொண்ட கடிதவுறைகளின் மேல் இடது பக்கத்தில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிக்கப்பட வேண்டும்.

விண்ணப்பப் பத்திரங்களை நேர்முகமாகப் பெற விரும்புபவர்கள் சாதாரண அலுவல் நேரங்களில் இவ்வலுவலகத்திற்கு நேரில் வந்தும், தபால் மூலம் பெற விரும்புபவர்கள் தலைவர் அவர்களுக்குத் தமது விலாசமிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடிதவுறைகளை (அளவு 9" X 4") அனுப்பியும் பெறலாம். விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

தலைவர்.
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்.

2 பீ., டி பொன்சேகா வீதி,
கொழும்பு - 5.
1970 ஜூலை 20-ம் திகதி.


## சுவீப் முடிவுகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தலா ரூபா 452/65 ஆறுதல் பரிசுகள் பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:

**A**
27 A 0257 — 28 A 0700
07 A 0950 — 38 A 0057
02 A 0777

**B**
25 B 0387

**C**
17 C 0530 — 07 C 0426
18 C 0846

**D**
16 D 0443 — 15 D 0080
11 D 0672 — 20 D 0171

**E**
04 E 0046 — 33 E 0487
15 E 0309 — 12 E 0618
15 E 0769 — 08 E 0133
34 E 0543

**F**
28 F 0061 — 33 F 0566
22 F 0879 — 31 F 0500
22 F 0897
15 F 0096 — 05 F 0204

**G**
23 G 0285 — 04 G 0032
19 G 0423 — 14 G 0274
34 G 0350

**H**
15 H 0791 — 22 H 0178
13 H 0867 — 22 H 0257
07 H 0891 — 01 H 0902
32 H 0665

**J**
16 J 0183 — 27 J 0096
26 J 0974

**K**
18 K 0448 — 18 K 0542
23 K 0627 — 26 K 0351
34 K 0471 — 13 K 0270

**L**
12 L 0825 — 37 L 0288
06 L 0922 — 07 L 0680
16 L 0817 — 26 L 0924

**M**
04 M 0459 — 07 M 0308
36 M 0373 — 28 M 0190
26 M 0267 — 08 M 0525
37 M 0656

**N**
04 N 0861 — 30 N 0057
08 N 0728

**O**
29 O 0552 — 30 O 0499
04 O 0604

**P**
29 P 0557 — 31 P 0047
02 P 0141

**Q**
15 Q 0243 — 05 Q 0581
36 Q 0968 — 12 Q 0049

**R**
08 R 0188

**S**
15 S 0055 — 10 S 0400
06 S 0627 — 07 S 0775
11 S 0640

**T**
08 T 0307 — 22 T 0350
31 T 0788 — 11 T 0696
24 T 0086

**U**
26 U 0461

**V**
32 V 0432 — 11 V 0458
24 V 0940 — 11 V 0687
27 V 0276

**W**
16 W 0357 — 35 W 0268
27 W 0230

**X**
18 X 0163 — 22 X 0210
36 X 0559

**Y**
04 Y 0782 — 23 Y 0781
28 Y 0372

**Z**
09 Z 0625

## வலதுசாரிக் கட்சி தலைவர் இந்தியாவில் படுகொலை

பட்டியாலா (இந்தியா), ஆக. 9

இந்திய வலதுசாரி அரசியல் தலைவர்களில் ஒருவரான திரு. பஷந்சிங் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இனந் தெரியாத மூன்று துப்பாக்கிக்காரர்கள் இவரைச் சுட்டிருப்பதாக பொலீஸார் கூறினர்.

பஞ்சாப்பில் வலது சாரி சுதந்திரா கட்சியின் பொதுச் செயலாளரான திரு. சிங், ராஜ்ய சபையின் ஒரு உறுப்பினராவார். தனது கிராம பண்ணையில் வைத்தே இவர் சுடப்பட்டதாக பொலீஸார் கூறினர்.

ஜீப் ஒன்றில் வந்ததாக நம்பப்படும் கொலைக்காரர்கள் துப்பாக்கிப் பிரயோகத்தின் பின்னர் விரைந்து விட்டனராம்.

மாவோ கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களால் திரு. சிங் கொல்லப்பட்டிருப்பதாக சுதந்திரா தலைவர்களில் ஒருவரான திரு. என். ஜி. ரங்கா கூறியுள்ளார். (ம)

இப்பத்திரிகையை அச்சிட்டவர், சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேன மாவத்தை, கொழும்பு - 12 இலங்கை)- வெளியிட்ட திகதி 10 ஆகஸ்ட் 1970-
Thanthi 5, Gunasena Mawatha, Colombo 12, (Ceylon).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org